யாரோ தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் ஆரம்பிக்க பயப்படுகிறார்கள் என்று ரகசியமாக அங்கத்தினருக்கு தகவல் அனுப்பி இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் இந்திய நாட்டிலே எங்கே சென்றாலும், இப்போது தொழில் ஆரம்பிப்பதற்கு இடம் வேண்டுமானால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டுக்கு செல்லுங்கள் என்று சொல்கிற நிலை இருக்கிறது. நண்பர் விநாயகம் மட்டும் இப்படிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

* 175 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காகிதத் தொழிற்சாலை ஏதேனும் அமைக்கும் உத்தேசம் தற்போது தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் படுகையில் ஏராளமான மூங்கில், வைக்கோல் புல் முதலியவைகள் கிடைப்பதால் இனிமேலாகிலும் அந்தப் பகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு இருக்கும் காகித பற்றாக்குறையைப் போக்குவதற்கு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவேண்டும் என்றும், நம்முடைய தமிழ்நாட்டில் ஒன்று கூடுதலாக தொடங்கவேண்டும் என்றும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய காகிதத் தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தாக வேண்டும் என்றும் நம்முடைய மத்திய அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அதற்காக ஒரு குழு அமைத்து என்ன மூலப் பொருள்கள் நம்முடைய நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்து புதிய காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. அது விரைவிலே முடிவாகும் என்று கருதுகிறேன்.

* 176 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether a barrel and drum fabrication unit is to be set up to assist the Madras Refineries by the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த பீப்பாய்களை, தொட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் மாநில அரசு ஆரம்பிக்காவிட்டாலும் சரி, தனியாருக்கு அம்மாதிரி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்கப்படுமா ? மத்திய அரசாங்கம் அதை ஆரம்பிக்க இருக்கிறார்களா ? மாநில அரசு வேறு ஏதாவது உப தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிரம்ஸ் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையை பொறுத்த அளவுக்கு மெட்ருஸ் ரிபைனரி என்ற ஒரு பெரிய தொழிற்சாலையைச் சுற்றி, சிறு, சிறு தொழில்கள் வளரவேண்டும். சிறு தொழில் அதிபர்களுக்கு இந்தத் தொழிலைக் கொடுக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்திக்கொண்டு வந்தோம். ஆனால், நம் வேண்டுகோளை மறுத்து, மத்திய அரசு ஐ.ஓ.ஸிக்கு, இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு, கிட்டத்தட்ட ரூ. 28 லட்சம் வரை செலவில், 10 லட்சம் பாரெல்ஸ். 5 லட்சம் டிரம்ஸ் ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்யக்கூடிய ஒரு அனுமதியை வழங்கியிருக் கிறார்கள். எப்படியாவது நம்முடைய தமிழ் நாட்டிற்கு அந்தத் தொழிற்சாலை வந்ததே என்பதில் மகிழ்ச்சி.

* 177 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any collaboration has been entered into with Messrs Cadbury by Government for the manufacture of Chocolates in the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 178, 179, 180, 181 ஆகிய எண்ணுள்ள கேள்விகள் ஒற்றிவைக்கப்படுகின்றன.

விராச்சிலையில் குடிநீர் ஊருணி

* 182 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா : (அ) திருமயம் தொகுதியிலுள்ள, விராச்சிலையில் அமைந்திருக்கும் குடிநீர் ஊருணிக்கு வரும் வாரியில் நீண்ட அளவு பெருங்குழாய் அமைத்துக் கொடுக்க அரசு முற் படுமா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: (அ) & (இ) திருமயம் ஊராட்சி ஒன்றியக் குழுவில் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 8,000 (ரூபாய் எட்டாயிரம்) செலவில் விராச்சிலையில் அமைந் திருக்கும் குடிநீர் ஊருணிக்கு வரும் வாரியில் நீண்ட அளவு பெருங் குழாய் அமைக்கத் தீர்மானித்துள்ளது. மேற்படி வேலைக்கு ஊராட்சியின் பங்கான ரூ. 2,000-ஐ (திட்டத்தின் மொத்த செலவில் 25 சதவிகிதம்) ஊராட்சி தனது நிதியிலிருந்தோ அல்லது பொது மக்களிடமிருந்தோ பணம் வசூலித்து செலுத்தியவுடன் வேலை துவக்கப்படும்.